மலர் எண் : 12

உ

அண்ணாமலையானைப் பாடுதும்!
தோத்திரமும் சாத்திரமும் ஆனான் கண்டாய்!

கொற்றவன் குடி
உமாபதி சிவனார் அருளிய

போற்றிப் பல்தொடை

(உரை விளக்கம்)

2008

"ஆணிப்பொன்னன் அண்ணாமலை கைதொழப்
பேணிநின்ற பெருவினை போகுமே!" – நாவரசர்

வெளியிடுவோர் :

அருள்தரும் மாணிக்கவாசகர் மன்றம்

இராமாபுரம், காவேரிப்பாக்கம்–632508 – வேலூர் மாவட்டம்.

திருச்சிற்றம்பலம்

அண்ணாமலை தொழுவார்வினை வழுவா வண்ணம் அறுமே! – ஞானசம்பந்தர்

உள்ளுறை

பதிப்புரை
பொன்னுசாமி அடிகளார்
உமாபதி சிவம்
சுந்தரத்தாள் – மகாவித்துவான் மா. அமிர்தலிங்கனார்
போற்றிப் பல்தொடை – மூலம் சந்தி பிரித்தது
போற்றிப் பல்தொடை பழைய உரை விளக்கம்

☆ ☆ ☆

தெளிவு குருவின் திருமேனி காண்டல்!
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்!
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்!
தெளிவு குருவு சிந்தித்தல் தானே! – திருமந்திரம் (10–139)

இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றும்
துன்பம் தொடர்வறுத்துச் சோதியாய் – அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து. (8–5–62)

அண்ணாமலை எம் அண்ணா போற்றி! கண்ணார் அமுதக் கடலே போற்றி!

உ

திருச்சிற்றம்பலம்

அண்ணாமலையானைப் பாடுதும்!

சித்தத்தைச் சிவன்பாலே வைத்த சீரடியார்

தெய்வத்திரு. **பொன்னுசாமி அடிகளார்** அவர்களின்

பதினேழாம் ஆண்டு ஆராதனைத் திருமலர்

உமாபதி சிவம் அருளிச்செய்த

போற்றிப் பல்தொடை (உரை விளக்கமுடன்)

இம்மலரினை வெளியிட்டு வாழ்த்தியருளியவர் :

ஞானத் தந்தையார் சிவத்திரு. **கு. முத்துக்குமாரசாமி,**

தலைமை நிர்வாகம், மகான் சேஷாத்திரி சுவாமிகள் ஆசிரமம்,

திருவண்ணாமலை.

முதற்பிரதி பெறுபவர் :

திருவிக அடிப்பொடி - திருமந்திரச் செம்மல்

முனைவர் திரு. **அ.நாகலிங்கம்**

தமிழ்ப்பேராசிரியர் (ஓய்வு)

மலர் எண். 12

நாள் : 20.1.2008

பதிப்புரை

சிந்தனைக்கு உரிய சிவனே போற்றி!

உலக மக்கள் உய்வு பெறுவதற்காக - தமிழ்ச் சைவர் மேன்மை அடைவதற்காக முன்னோர்கள் நமக்குத் தந்த அரும்பெரும் செல்வங்கள் பன்னிரு திருமுறைகளும் பதினான்கு சாத்திரங்களும் ஆகும். இவ் இரு தொகுதிகளையும் தம் உயிரெனப் போற்றிப் படித்தறிந்து தெளிந்து, தாம்பெற்ற தெளிவை மக்களுக்குப் பலகாலும் உரைத்து மறைந்த பெரியார் பால்சுவாமிகள் என்னும் பொன்னுசாமி அடிகள் ஆவர்.

திருவண்ணாமலையில் வாழ்ந்து சமாதி அடைந்த இவரையே தம் குருவாகக் கொண்டு, இவர் நினைவாகவே ஆண்டுதோறும் இவர்தம் சமாதியில் முற்பகல் திருமுறை வழிபாடு நிகழ்த்தியும், மதியம் அன்னதானத்தை தவத்திரு சேஷாத்திரி ஆசிரமத்தில் செய்தும், மாலையில் திருவண்ணாமலைத் திருகோயிலில் இவர் நினைவாக நூலை வெளியிட்டும் தம் குரு பத்தியை உலகுக்கு உணர்த்தி, தமிழ்த் தொண்டும் சைவத்தொண்டும் ஆற்றிவருபவர் காவேரிப்பாக்கம் இராமாபுரம் அருள்தரும் மாணிக்கவாசகர் மன்ற அமைப்புச் செயலாளர் முத்துவிழாக்கண்ட பெரியார் திருவாசகச் செல்வர் இரா.கி.சச்சிதானந்தம் அவர்கள். மேலும் இவர் மன்றத்தின் மூலம் ஆண்டுதோறும் இருமுறை

திருவாசகப் பகுதிகளை விளக்கவுரையுடன் வெளியிட்டும், மாத பௌர்ணமி பூசனையை நிகழ்த்தியும் பல்லாண்டுகளாகத் தொண்டாற்றி வருபவர்.

இப்பொழுது மெய்கண்டார் பரம்பரை உமாபதி சிவம் அருளிய எட்டு நூல்களுள் ஒன்றாகிய 'போற்றிப் பல்தொடை' என்னும் சைவ சித்தாந்த நூலை விளக்கவுரையுடன் இவர் வெளியிடுவது தமிழ்ச்சைவர் பெற்ற பெரும் பேறாகும். இந்நூலை நன்கு படித்து உண்மை தேர்ந்து தெளிந்து இறையருளில் திளைக்க வாரீர் உலகோரே என அன்புடன் அழைக்கின்றேன்!

இச்சீரிய நூலுக்குக் கட்டுரை நல்கிய மகாவித்துவான் மா. அமிர்தலிங்கம் அவர்களுக்கும். நன்முறையில் விரைந்து அச்சிட்ட பட்டாபிராம், ஸ்ரீ குமரன் அச்சக உரிமையாளர் மோகன. இராஜலிங்கம் அவர்கட்கும், விழாவிற்கு வருகைதந்து சிறப்புரை ஆற்றிய - வாழ்த்தியருளிய பெருமக்களுக்கும், கலந்துகொண்டு சிறப்பித்த அன்பர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

திருவண்ணாமலை,
20.1.2008

அ. நாகலிங்கம்



தவத்திரு. பொன்னுசாமி அடிகளார்

தவத்திரு. பொன்னுசாமி அடிகளார்

இன்றைய வேலூர் மாவட்டத்து வாலாசா வட்டத்தில், குடிமல்லூரில், தெய்வத்திரு. பொன்னுசாமி அடிகளார் 1905 ஆம் ஆண்டில் தோன்றி, சென்னையில் நல்லாசிரியராய் 10 ஆண்டுகள் பணியாற்றி, சைவத் தமிழ்ப் பணி புரிவான்வேண்டி சீரிய ஆசிரியப் பணியினைத் துறந்தும், இயற்கைத் துறவு ஏற்றும், புலவர் பட்டமும் பெற்றும், தோத்திரம், சாத்திரம், புராணம் பல பயின்றும், நோயற்ற பயனுள்ள உலக வாழ்விற்கும், உயிர் உய்வதற்கும் இயற்கை உணவு முறை ஒன்றே எளிய இனிய வழி எனத் தேர்ந்தும், தம் இருபதாம் அகவை முதலே அவித்தல், சூடேற்றலின்றி அதிதூய இயற்கை உணவினையே ஒருவேளை ஏற்று பசி, நீர்வேட்கையினை நிரல் செய்தும், ஆசனங்களைத் தவறாது இறுதிவரை பயின்றும், பல்லாண்டுகள் நோயற்ற வாழ்வு வாழ்ந்து காட்டிச் செழிப்புடன் 66 ஆண்டுகள், வடப்புலத்துத் தலங்களுடன் புனிதப் பயணமும் செய்தருளினார்கள்.

தமிழ் நாடெங்கும் சிற்றூர்களிலும் கைம்மாறு கருதாது "ஞாலம் ஈசன் புகழே மிக வேண்டும்", "நேசமுடைய அடியவர்கள் நின்று நிலவ

வேண்டும்" என்ற அருள் நோக்குடன், திருநெறிய சமயத் தொண்டாற்றி, அன்பினால் ஆலயம் தொழுதும், யாதும் குறைவிலராய், நிராசை எனும் நிறை செல்வத்தராய், சிவவேடப் பொலிவு காட்டி, கெடுதலிலாத் தனி அடியராய், பெயர் மாற்றம், உடை மாற்றம் ஏதும் இன்றி வாழ்வாங்கு வாழ்ந்து, வான் வழிகாட்டிய இச் சிவஞானியர், பிரமோதூத தை, 13ஆம் நாள் 27.1.91 ஞாயிறு, கண்ணப்பர் திருநாளாம் மிருக சீரிட நன்னாளில், பிரதோட காலத்தே, அண்ணாமலை அண்ணலின் அடிக்கமலத்துள் ஒடுக்கம் கண்டருளித் தம் அன்பர்க்குத் தண்ணருள் பாலிக்கின்றார்கள்!

வாழ்க அடிகளார் வான் புகழ்! வெல்க அவர்தம் தூய நல்தொண்டு!

முன்னுரை

'அருளே உலகை ஆள்விப்பது' என்பது காரைக்கால் அம்மையார் திருவாக்கு. கடவுள் உணர்ச்சியும் அவரை வணங்கி வாழ்த்துதலும் 'மானுடத்து இயல்பு' என்று மணிவாசகரும் அருளுகிறார்.

இத்தெய்விகப் பண்பு யாவரிடத்தும் மலர்ந்து பயன்தர வேண்டும் என்ற உயர்ந்த நோக்குடன் புண்ணியப் பணியாம் ஆசிரியப் பணியினை தொடக்க காலத்தே (1940) உதறித்தள்ளி ஆன்மீகப் பணியினை மேற்கொண்டு பன்னிரு திருமுறை, பதினான்கு மெய்கண்ட நூல்கள் அடியொற்றி இளமை முதலே தமிழகமெங்கும் சென்று தொண்டாற்றி வழிகாட்டியவர் திருவருணை பால் சுவாமிகள் தெய்வத்திரு. பொன்னு சாமி அடிகளார் ஆவர். அத் திருவினர் வெள்ளாடை துறவாதே துறவுநெறி நின்று பெயர் மாற்றம் கொள்ளாது புலவராய் சித்தாந்த செம்மலாய், சிவபரமான சொற்பொழிவாளராய், அருள் வழங்கும் ஞான குருவாய் விளங்கியவர்.

யோகியாய் ஒரு வேளை இயற்கை உணவே கொண்டு, பசி நீர் வேட்கை சமன் செய்து உடல் நோய் கொண்டு அடராமலும், சித்த விகாரக்

கலக்கமற்றும், தாம் அடைந்த தமிழ், சாத்திரத் தெளிவு உலகிற்கு வழங்கி இன்புற்று சித்தத்தைச் சிவன்பாலே வைத்து சீரடியாராய் 86 ஆண்டுகள் வாழ்வாங்கு வாழ்ந்து அண்ணாமலையின் அருளால் 1991 ஆம் ஆண்டு கண்ணப்பர் திருநாளாம் மிருக சீரிட நன்னாளில் ஞாயிறு பிரதோட காலத்தே சிவபெருமான் திருவடி நீழல் அடைவுற்றார்.

அவருடைய ஆண்டு நினைவு ஆராதனைத் திருநாளில் சிவஞான போதம், திருவருட்பயன், திருக்களிற்றுப்படியார், சிவப்பிரகாசம் ஆகிய சாத்திர நூல்களும், திருவாசகத் திரட்டு (ஆண்டு முழுவதற்கும் நாளொருபாடலாக), ஒன்பதாம் திருமுறை (ஆண்டு முழுவதற்குமாக), திருவாசக முக்கனிகள், சிவபுராணம், அருள்நிறை சாரதா தேவியார் வாழ்வும் வாக்கும் ஆகியவை வெளிவந்துள்ளன.

சுவாமிகளின் திருவுளப்பாங்கின் வண்ணம், இவ்வாண்டு 17 ஆம் ஆராதனைத் திருமலராக பதினான்கு மெய்கண்ட நூல்களுள் பத்தாவதாகத் திகழும் போற்றிப் பல் தொடை சந்திபிரித்தமூலம், பொழிப்பு, ஏற்புடைய கட்டுரையுடன் வெளிவருகின்றது. இந்நூலை அருளியவர் புறச் சந்தான ஆசிரியராம் மெய்கண்ட சிவம், அருள்நந்தி

சிவம், மறைஞான சம்பந்தசிவம் அடுத்து நான்காமவராகப் போற்றப்பெறும் உமாபதி சிவம் ஆவர்.

அவர் அருளிய சித்தாந்த அட்டகம் எனப்பேசப்பெறும் எட்டு நூல்களுள் வினா வெண்பா, போற்றிப்பல்தொடை, கொடிக்கவி மூன்றும் தம் ஞானாசிரியர் மறைஞான சம்பந்தரைப் போற்றுவன. உமாபதியாந் சம்பந்தனாரின் தலைமாணவராகத் திகழ்ந்தார். குருவின் வழிபெற்ற திருவருள் ஞானத்தை, எண்வகையாய் விரித்து ஓதியருளினார். இவையன்றியும் கோயில் புராணம், சேக்கிழார் புராணம், திருத்தொண்டர் புராண சாரம், திருப்பதிகக் கோவை ஆகிய தமிழ் நூல்களும், பௌட்கரம் என்னும் வட மொழி உப ஆகமத்திற்கும் விரிவுரை நூலும் அருளினார். தம் குருமணியாம் மறைஞான சம்பந்தர் நூல் ஒன்றும் செய்தருளவில்லை. அவர் சித்தாந்த உண்மைகளைக் கற்பித்தும், நன் முத்திப்பேறும் அருளியும், பர முத்திநிலை அடைந்தார். தில்லைப் பெருங்கூத்தன் வழிபாடு செய்யும் உரிமை உடைய மரபில் தோன்றிய உமாபதியார் பெருமான் பூசனையுடன் சித்தாந்தச் செல்வராய் விளங்கினார். பிற செய்திகள் சுவாமிகள் அருள் வரலாற்றினுள் காணலாம்.

இச்சாத்திரநூல் 95 கண்ணிகள்போல் வெண்பாக்களாய் அருளப்பெற்றது. இதனுள் 14 போற்றிகள் பயில்கின்றன. இறுதியாக வரும் போற்றி (தம் ஆசிரியப் பெருந்தகையினை 'என் கொண்டு வணங்கித் துதிப்பேன்' என்று ஆற்றாமை புலப்பட அருளியுள்ளார். நெஞ்சைவிட்டு அகலாது எப்போதும் ஒலித்து நிற்குமாபோல் உள்ள, போற்றிகள் சில 1. பிறவி வழக்கு அறுக்க நின்ற நிருத்தநிலை போற்றி!. 2. அளவிறந்து வந்த பெரிய வழி போற்றி! 3. மீட்டறிவு காட்டும் வினை போற்றி! 4. பொய்யாத வல்லபமே போற்றி! 5. நேசத்தை வைத்த நெறி போற்றி! 6. பண்டாரியானபடி போற்றி! 7. பட்டோலை தீட்டும்படி போற்றி! 8. சித்தி பதிக்கும் தரம் போற்றி! 9. நீதி நிறுத்தும் நிலை போற்றி! 10. கள்ளம் காட்டும் கழல் போற்றி!

'வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை'! என்னும் குறளமுதினை உமாபதியார் எடுத்தாளும் பாங்கு, சிறந்த மருத்துவன் கையாளும் திறம்போன்றது. உலக வாழ்வில் மயங்கியும், மூழ்கியும், திளைத்தும், திகைத்தும் உழலும் ஆன்மாக்களை உளங் கொண்டு, உய்யும்நெறி அறிந்து நிற்கவும், கைக்கொள்ளவும், மாட்டாத சிறுமையுடைய ஆன்மா, உடல் கழன்றதும், அவ்வுயிரை இயமன் சபையில் இயமதூதர் பிடித்துக்கொண்டுபோய் நிறுத்தவும், இயமன் உயிரை நோக்கி

"இன்றைக்கும் இல்லையோ பாவி, பிறவாமை" என்று, கேட்பதனை நயமாக இடித்துரைக்கிறார்.

மற்றும் பரம்பொருள் உண்மை வடிவாம் ஒளி நிலையிலும், பொது நிலையில் இறங்கி வரும் அம்மையப்பனையும், ஆதியாயும், அரும்பெரும் நீதியாகவும் நின்று நிறுத்தும் நிலைப்பாட்டினை, புராணச் செய்தியாக, மனு நீதிச்சோழன் செயற்கரும் செயலினை, அப்பேரரசன் கன்றினை இழந்து துடிக்கும் பசுவினைத் தேரில் ஏற்றிக்கொண்டு, பசுங்கன்றிழப்பிற்குக் காரணமான தன் ஒரே தவப்புதல்வனை, தேரூர்ந்து மகன் நரகில் புகுந்து துன்புறாவண்ணம், 'தாய்ப் பசுவின்' துன்பம் களைவதாம் நீதிநிறுத்திய திருவருட் செயலை பொருந்த உரைத் தருளுகின்றார்.

முடிவில் சுவாமிகள் தமக்குப் பெருமான் கைச்சீட்டு சாம்பான் வழி அருளியதை எண்ணியும் அவனுடைய அருட் குணங்களுள் அவன் சீரடியார் இடும் பணியினை ஏவலாளன் ஒப்ப ஏற்று செய்வதும் ஒன்று என்று அழகு மிளிர உரைத்தருளுகின்றார்!

வாழி உமாபதி சிவனார் பொருள் நூல்கள்!
வாழி அப்பெருந்தகையின் பூங்கழல்கள்!

உமாபதி சிவம்

தில்லைவாழ் அத்தணனின் திருவுடைய அந்தணர் மரபில் மூவாயிரவருள் உமாபதி சிவமும் ஒருவர். திருச்சிற்றம்பலம் கூத்தப் பிரானைப் போற்றி வழிபாடாற்றும் உரிமை உடையவர். தில்லையம்பலக் கூத்தப்பிரான் ஐந்தொழில் இயற்றுவதான ஞானத் திருநடம்புரியும் ஒளி நிலையம் எனத் திகழ்வது. சைவர் இதனையே முதலாவதாக உயர்ந்த திருத்தலம் எனப் போற்றுவர். தில்லை வாழந்தணர் தில்லையம் பலவனையே முழு முதலாக எண்ணி வழிபடுபவர். திருஞான சம்பந்தருக்கு கணநாதராகவே இவ்வந்தணர் காட்சி தந்தனர். இவ்வந்தணருள் தாமும் ஒருவராக இரணிய வன்ம அரசனுக்குப் பெருமான் காட்டியருளினான். 'பெறுவது சிவன்பால் அன்பாம் பேறு' என்னும் உறுதியுடன் வாழ்ந்தனர் என்று சேக்கிழார் பெருமான் இவர்களைப் பேற்றுவர்.

தில்லைவாழ் உமாபதி சிவம் ஆகமங்களில் ஆழ்ந்த பயில்வும், சிறந்த ஒழுகலாறும் உடையவராய்த் திகழ்ந்தவர். திருவருள் கூடுவதற்குத் தக்கதோர் பருவம் வாய்த்தது. ஒருநாள் உமாபதி சிவம்

பெருமான் பூசனை முடித்து தமது இருப்பிடம் தமக்கமைந்த சிவிகை, தீப்பந்தம் முதலிய விருதுகளுடன் சென்றபோது, திண்ணையில் அமர்ந்திருந்த மறைஞான சம்பந்த சுவாமிகள் தம் சீடரை நோக்கிப் "பட்ட கட்டையில் பகல் குருடு ஏகுதல் பாரீர்!" என்று சொன்னார். இதனைக் கேட்ட உமாபதியார் சிவிகையினின்றும் உடனே இறங்கிச் சென்று மறைஞான சம்பந்தர் திருவடிகளைத் தொழுது நின்று சுவாமிகள் சொன்னதற்குப் பொருள் கேட்டார். கேட்ட அளவிலேயே உமாபதியார் மறைஞான சம்பந்தரின் சீடரானார். (பட்ட கட்டை - சிவிகை; பகல் குருடு - பகலில் தீப்பந்தமுடன் சென்றமை).

அவர் சிவஞானப் பேற்றினையே விரும்பி இருந்தமையால் சாதி, குலம், கல்வி, பிறப்பு இறப்பு ஆகிய சழக்கினின்றும் விலகி நின்றார். அவருடைய பக்குவம் அறிதற்பொருட்டு ஒருநாள் மறைஞான சம்பந்தர் கைக்கோளர் தெருவில் சென்று பாவில் செலுத்தும் கூழினை ஏற்று விடாய் தணிக்க உண்டார். உடனாய்ச் சென்ற உமாபதியார் சம்பந்த சிவனார் புறங்கையில் ஒழுகிய மிச்சத்தை கைகளில் ஏந்தி உண்டார். உமாபதியார் பக்குவம் கண்ட மறைஞான சம்பந்தர் உடனே அவருக்கு அருட்கொடை வழங்கினார். சிவஞானச் செய்தியினை உணர்த்தி அருளினார். இச்செய்தியினை அறிந்த தில்லைவாழ் அந்தணர்,

உமாபதியார் குலமரபு மீறியதாகக் கருதி நடேசப்பெருமானுக்கு பூசனை செய்யும் தகுதி இழந்தவர் என்று ஒதுக்கினார்கள். தில்லையின் கீழ்ப்பால் அமைந்த கொற்றவன் குடிக்குச் சென்று அங்கு ஓர் திருமடம் அமைத்து தம் சீடருடன் சீலமிகு வழிபாடு செய்து வாழலானார்.

இச்சமயம் ஒரு நாள் அந்தணர்கள் தில்லைமன்றடைந்து பூசனையின் பொருட்டு உடையார் பேழையினைத் திறந்து பார்க்கவும், அங்கே பெருமான் திருவுரு காணாது திகைத்தனர். மிகவும் வருந்தினர். அஞ்சினர். அப்போது பெருமானார் வான்வழி 'நம் பூசனை ஆற்றும் தகைமை உமாபதி சிவனார்'. ஆதலால் அவன்பால் நாம் அமர்ந்தோம்! என ஒலித்தருளினார். அதுகேட்டு அனைவரும் உமாபதி சிவனார் திருமடத்திற்கு சென்று குறையிரந்தனர். பொன்னம்பலம் வந்து பூசனை இயற்றும்படியும் வேண்டினர். சுவாமிகளும் அவர்கள் வேண்டியவாறே செய்து மீண்டார்.

இன்னும் தில்லைப் பெருவிழாவின் போது கொடி ஏற்றும் நிகழ்ச்சி எவ்வளவு முயன்றும் அந்தணர்களால் கொடி ஏற்ற முடியவில்லை. அது சமயம் வானில் 'உமாபதி சிவம் வந்தக்கால் கொடிஏறும் என்ற,

அருள்வாக்கு எழுந்தது. அவர்கள் யாவரும் கொற்றவன் குடிக்குச் சென்று கொடியேற்றி அருளும்படி வேண்டினர். உமாபதியாரும் இறைவன் இசைத்தபடி பொன் மன்று சென்று பெருமானை வணங்கி, 'கொடிக்கவி' என்ற சிறு நூலை பாடத் தொடங்கினார். முதல் பாடல் முடியும் சமயம், அங்கிருந்த கொடி தானே ஏறினதைக் கண்டு யாவரும் வியந்தனர்.

அடுத்து மிக அதிசய நிகழ்வு ஒன்று.. பெற்றான் சாம்பான் சிவப்பேரன்பன். முன்பிறவியில் பெருந்தவம் புரிந்தவன். ஏதோ சிறுவழுவின் காரணமாய் தாழ்குலத்தில் தோன்றினான். முன்னுணர்வு மூளவும் தில்லைப் பெருமான்பால் மாறாத பேரன்பு படைத்தவனாய் அத் திருக்கோயிலுக்கு நாளும் விறகு வெட்டி கொண்டுசேர்க்கும் திருப்பணி செய்யலானான். நடேசப் பெருமான் சாம்பான் கனவில் தோன்றி இனி தன்பால் பேரன்புடைய உமாபதி சிவனார் திருமடத்திற்குப் பணிசெய்யப் பணித்தார். அதுமுதல் சாம்பான், உமாபதி சிவனார் திருமடத்திற்கு விறகு கொண்டு சேர்க்கும் பணியினைச் செய்யலானான். ஒருநாள் பெருமழை காரணமாய் திருமடத்திற்கு விறகு காலத்தே வாராமையால் சமைக்கும் பணி முட்டிற்று. காலத்தாழ்விற்குக் காரணம் கேட்ட சுவாமிகளிடம்

உள்ளவாறு சொன்னதும் மறுநாள் சாம்பான் வந்ததும் தமக்குத் தெரிவிக்கும்படி பணித்தார்கள்.

மறுநாள் இரட்டிப்புப் பங்கு விறகுடன் சாம்பான் திருமடம் நெருங்குகையில் இறைவன் முதியவர் வடிவு தாங்கி சாம்பானிடம் ஒரு கைச் சீட்டு தந்து அதனை உமாபதி சிவனாரிடம் சேர்ப்பிக்கச் சொன்னார். சாம்மான் திருமடம் வந்த செய்தியை உமாபதி சிவனாரிடம் அன்பர்கள் தெரிவித்தனர். உமாபதியார் சாம்பானை நோக்கி அவனை யார்? என்று வினவவும் சாம்பான் தன்னிடம் முதியவர் கொடுத்த கைச் சீட்டைக் கொடுத்து நின்றான். அச்சீட்டில் வரைந்திருந்த செய்தி வருமாறு :

அடியாற்கு எளியன் சிற்றம்பலவன் கொற்றம்
குடியாற்கு எழுதிய கைச்சீட்டு - படியின் மிசைப்
பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கை செய்து
முத்தி கொடுக்க முறை.

இத்திருமுகம் கண்ட உமாபதியார் அதனைத் தம் கண்களில் ஒற்றிக்கொண்டு உடம்பு புளகமுற்று கூத்தப்பெருமான் பேரருளை எண்ணி வியந்தனர். பெருமான் ஆணையிட்ட வண்ணம் சுவாமிகள்

சாம்பானுக்கு உடனே சிவஞான அருட்கொடை வழங்கத் தொடங்கினார். சாம்பான் ஒளிப்பிழம்பாக எழுந்து முத்திப்பேறு பெற்றார். இச்செயலை விளங்கிக்கொள்ள இயலாத சாம்பான் சுற்றத்தினர் அரசனிடம் சுவாமிகள் சாம்பானைத் தீயால் எரித்து விட்டதாக குறை கூறினர். அரசரும் சுவாமிகள் பால் வந்தபோது தீக்கையின் அருமையினை சொல்லக் கேட்டார்! ஒ அரசன் சுவாமிகளிடம் இன்னுமொரு தீக்கையினைச் செய்தருள வேண்டினான்.

உமாபதியார் அதற்கிசைந்து தீக்கைக்குரிய சத்திநிபாத நிலை எய்தியவர் ஒருவரும் அங்கு இலராகப் பெருமான் திருமஞ்சன நீர்பெற்று வளர்ந்ததான கோமுகை அருகில் முள்ளிச் செடி ஏற்றதாக இருப்பதை நோக்கி உமாபதியாரும் அம்முள்ளிச்செடிக்கு அருள்நோக்கால் திருவருள் பாலித்தார். உடனே அம்முள்ளிச் செடியும் ஒளி உருவம் பெற்று வானில் எழுந்து கலந்தது. இவ்வருட் செயலை நேரில் கண்ட மன்னன் சுவாமிகளின் சிவானுபூதிப் பெருநிலையை வியந்து போற்றியதுடன் அவர்தம் திருவடிகளை வணங்கி சிறப்புகள் பலசெய்து மகிழ்ந்தான். தன் பிழை பொறுத்தருளவும் வேண்டினான்.

சிவபரம்பொருள் சிபாரிசுக்கடிதம்போல் இருமுறை தம் திருமுகம் கொடுத்தருளினார். முன்னையது சேரமான் பெருமாள் நாயனாருக்குத் திருமுகம் கொண்டுவரும் பாண பத்திரனாருக்கு பொன் கொடுத்தனுப்பச் சொல்லியது. இஃது பதினோராம் திருமுறை முகப்பிலேயே திருமுகப்பாசுரமாகத் திகழ்வது. அடுத்து நம் உமாபதி சிவனாருக்குப் பெற்றான் சாம்பான் வழி கொடுத்தனுப்பிய கைச் சீட்டு ஆகும். இது மிக வியப்பு மிக்கது. முத்திப்பெரும் பேரின்பம் முழுமுதல்வன் வழங்க பெற்று மகிழ்வது பக்குவமுற்ற ஆன்மா. இதுவே தருவதும் பெறுவதும் ஆகிய நிலைப்பாடு. தன் சிவனடியாருள் ஒருவரைத் தேர்ந்து அவரை தம் கைச்சீட்டு கொண்டு வருபவருக்கு முத்திப்பேறு கொடுக்குமாறு பணித்த புதுமை இது ஒன்றேயாகும்.

மெய்கண்ட நூல்கள் பதினான்களுள் எட்டு நூல்கள் 'சித்தாந்த அட்டகம்' எனப் போற்றப்பெறும் சிறப்புடையன. அவற்றை அருட்கொடையாக வழங்கியவர் உமாபதிசிவமே ஆகும்!

சுவாமிகள் தம்மை நாடிவரும் பக்குவ ஆன்மாக்களுக்கு சிவஞானப்பேறு வழங்குவதும், சிவஞான விளக்கம் செய்வதும் தம் கடமையெனக் கொண்டு, விடாது செய்து, ஓர் சித்திரை அத்த நன்னாளில்

சமாதி நன் நிலையில் இருந்தவாறே சிவபரம் பொருளின் திருவருளில் இரண்டறக் கலந்தார். இச்செய்தியினை,

'சத்திய ஞான ஆனந்த தத்துவ அனுபவத்தால்
பத்திசெய் அடியார் போற்றப் பரன்அடிக் கமலம் எய்தி
நித்திய சுபாவ முத்த நிராகார பூர்த்தியான
சுத்த அத்துவித ஆனந்த சொரூபமே ஆகி நின்றார்,

எனும் சுவாமிகளின் புராணப்பாடல் வாயிலாக அறியலாம்.

உமாபதி சிவனார் திருவடி போற்றி!

தூரம்போலே அணிய
சுந்தரத்தாள்

– மகாவித்துவான் மா. அமிர்தலிங்கனார், காஞ்சிபுரம்.

உமாபதி சிவனாரின் அருள்நூல்களில் என் உள்ளங்கவர்ந்த ஒரு நூல் போற்றிப்பஃறொடை. போற்றிப் பஃறொடையில் உள்ள பல தொடர்கள் நெஞ்சைவிட்டு நீங்குவதில்லை. அவற்றுள் ஒன்றுதான் தூரம்போலே அணிய சுந்தரத்தாள் என்பது. திருவடியின் இயல்பினைச் சொல்லும் முகத்தான் கடவுள் இயல்பைக்கவின்பெற விளக்குகின்றார்.

கடவுள் எங்கே இருக்கிறார் என்றால் அப்பரடிகள் கடவுள் நம் உள்ளத்தின் உள்ளே இருக்கின்றார் என்று கூறுகிறார். உள்ளேயே இருப்பாரா வெளியிலும் வருவாரா என்றால் ஏன் வெளியிலும் வந்து போவார் என்கிறார். அது சரி. நீங்கள் அவனைப் பார்த்தீர்களா என்றால் அது எப்படி முடியும்? அவன்தான் உடனாடும் கள்ளம் வல்லவனாயிற்றே என்கிறார்.

உள்ளத்தே நிற்றி யேனும்
உயிர்ப்புளே வருதி யேனும்
கள்ளத்தே நிற்றி அம்மா
எங்ஙனம் காணுமாறே என்கிறார்.

அதுசரி, அவன் வெள்ளங்காட்டி வெருட்டும் கள்ளக் கம்பனாக இருந்தால் அவனை எப்படிக் காண்பது? காணலாம். அதற்கும் வழி உண்டு. ஆனால் காணமுயல்வதற்கு முன்னால் நமக்குள் இருக்கும் திருவடியை எப்போது காண முடியும் என்பதனையும் தெரிந்து கொள்ளவேண்டும்

போற்றிப் பஃறொடையோடு இணைத்துக்காண வேண்டிய இன்னொரு நூல் கந்தர் கலிவெண்பா. கந்தர் கலிவெண்பாவில் யான் எனது என்று அற்ற இடமே திருவடி என்கிறார். ஆம்; நாம் யான் எனது என்ற இரண்டினையும் இறுகப் பற்றிக்கொண்டிருக்கின்றோம். அதனால் தான் இறைவன் திருவடி எட்டாத தூரத்துக்குப் போய்விட்டது.

அந்த இரண்டினையும் விட்டு விட்டால் எங்கோ இருக்கும் திருவடிகள் நம்முடைய உள்ளத்தில் தோன்றும். அந்தத் திருவடிகளை நாம் சிக்கெனப்பிடித்துக் கொள்ளலாம்.

இறுகப்பிடித்துக் கொண்டேன் பதத்தை
இனிநான் விடுவேனோ?

என்று பெருமிதம் தொனிக்கப் பாடலாம்.

அதற்கு என்ன செய்ய வேண்டும்?
யான் எனது என்ற இரண்டினையும் விட்டுவிட வேண்டும்!
முடியுமா? முயன்று பார்ப்போம்; முயற்சிதிருவினை ஆக்கும் அன்றோ!

போற்றி யோம் நமச்சிவாய!

சித்தத்தைச் சிவன் பாலே வைத்த சீரடியார்

தெய்வத்திரு. பொன்னுசாமி அடிகளார் பதின் ஏழாம் ஆண்டு

ஆராதனை திருநாள் நினைவுமலர்

உமாபதி சிவாசாரியர் அருளிச்செய்த

போற்றிப் பல் தொடை

திருச்சிற்றம்பலம்

பூமன்னு நான்முகத்தோன் புத்தேளிர் ஆங்கு அவர் கோன்
மாமன்னு சோதி மணிமார்பனாம் - மன்னும்
வேதம்வே தாந்தம் விளக்கம் செய் விந்துவுடன்
நாதநா தாந்த நடுவேதம் - போதத்தால்
ஆம் அளவும், தேட அளவிறந்த அப்பாலைச்
சே ஒளி எவரும் தேறும்வகை - மாமணி சூழ்
மன்றுள் நிறைந்து பிறவி வழக்கு அறுக்க

1. நின்ற நிருத்த நிலை போற்றி!

... ... குன்றாத
பல்உயிர்வெவ் வேறு படைத்தும் அவை காத்தும்
எல்லை இளைப்பு ஒழிய விட்டு வைத்தும் - தொல்லை உறும்
அந்தம் அடிநடு என்று எண்ண அளவிறந்து

2. வந்த பெரிய வழி போற்றி!

.... முந்துற்ற
நெல்லுக்கு உமி தவிடு நீடு செம்பில் காளிதமும்
தொல்லைக் கடல் தோன்றத் தோன்றுவரும் - எல்லாம்
ஒருபுடை ஒப்பாய் தான் உள்ளவாறு உண்டாய்
அருவமாய் எவ்வுயிரும் ஆர்த்தே - உருவுடைய
மாமணியை உள்ளடக்கும் மாநாகம், வன்னிதனைத்
தான் அடக்கும் காட்டத் தகுதியும் போல் - ஞானத்தின்
கண்ணை மறைத்த கடியதொழில் ஆணவத்தால்
எண்ணும் செயல் மாண்ட எவ்வுயிர்க்கும் - உள்நாடிக்
கண்புலனால் காணார் தம் கைக்கொடுத்த கோலே போல்
பொற்பு உடைய மாயைப் புணர்ப்பின்கண் முன்பால்
தனுகரணமும் புவனமும் தந்து இவற்றால்
மனம் முதலால் வந்த விகாரத்தால் - வினை இரண்டும்

காட்டி அதனால் பிறப்பு ஆக்கிக் - கைக்கொண்டு

3. மீட்டு அறிவு காட்டும் வினை போற்றி!

... ... நாட்டுகின்ற
எப்பிறப்பும் முன்செய் இருவினையால் நிச்சயித்துப்
பொற்பு உடைய தந்தை தாய் போகத்துள் - கர்ப்பமாய்ப்
புல்லில் பனிபோல் புகும் திவலைக்கு - உட்படும்கால்
எல்லைப்படா உதரத்து ஈண்டிய தீப் - பல்வகையால்
அங்கே கிடந்த அநாதி உயிர் தம் பசியால்
எங்கேனுமாக எடுக்குமென - வெம் கும்பிக்
காயக் கருக்குழியில் காத்திருக்கும் காமியத்துக்கே
அக் கை கால் முதலாய் எவ்வுறுப்பும் - ஆசறவே
செய்து திருத்திப் பின்பு யோகு இருத்தி முன்புக்க
வைய வழியே கொண்டு அணைகின்ற

4. பொய்யாத வல்லமே போற்றி!

... ... அம் மாயக் காறான் மறைப்ப
நல்ல அறிவு ஒழிந்து நன்கு தீ - தொல்லை உறா
அக்காலம் தன்னில் பசியை அறிவித்து அழுவித்து

ஆவிசோரத் தாய் உள்நடுங்கி - மிக்கோங்கும்
சிந்தை உருக முலை உருகும் தீம் சுவைப்பால்
வந்து மடுப்பக் கண்டு வாழ்ந்து இருப்பப் - பந்தித்த
பாசப் பெரும் கயிற்றால் பல் உயிரும் பாலிக்க

5. நேசத்தை வைத்த நெறி போற்றி!
... ... ஆசற்ற
பாளைப் பசும்பதத்தும் பாலனாம் பதத்து
நாளுக்கு நாள் சகல ஞானத்து - மூள்வித்துக்
கொண்டு ஆள ஆளக் கருவி கொடுத்து ஒக்க நின்று
பண்டாரியான படி போற்றி!- தண்டாத
புன்புலால் போர்த்த புழுக்குரம்பை மாமனையில்
அன்பு சேர்கின்ற கட்டு ஐந்தாக்கி - முன்புள்ள
உண்மை நிலைமை ஒருகால் அகலாது
திண்மை மலத்தால் சிறையாக்கிக் - கண் மறைத்து
மூலவரும் கட்டில் உயிர் மூடமாய் உட் கிடப்பக்
கால நியதி அது காட்டி - மேலோங்கு
முந்தி வியன் கட்டில் உயிர் சேர்த்துக் கலை வித்தை

அந்த அராகம் அவை முன்பு - தந்த
தொழில் அறிவு இச்சை துணையாக மானின்
எழிலுடைய முக்குணமும் எய்தி - மருளொடு
மன்னும் இதயத்தில் சித்தத்தால் கண்டபொருள்
இன்னபொருள்என்று இயம்ப ஒண்ணா - அந்நிலை-போய்க்
கண்ட வியன் கட்டில் கருவிகள் ஈரைந்து ஒழியக்
கொண்டு நியமித்து அற்றை நாள் கொடுப்பப் பண்டை
இருவினையால் முன்புள்ள இன்பதுன்பங்கள்
மருவும் வகை அங்கே மருவி - உருவுடன் நின்று
ஓங்கு நுதலாய ஓலக்க மண்டபத்தில்
போம் கருவி எல்லாம் புகுந்து ஈண்டி - நீங்காத
முன்னை மலத்துஇருளுள் மூடா வகை அகத்துள்
துன்னும் இருள் நீக்கும் சுடரேபோல் - அந்நிலையே

6. சூக்கம் சுடர் உருவில் பெய்து தொழிற்குரியர்
ஆக்கிப் பணித்த அறம் போற்றி! -
... ... வேட்கை மிகும்
உண்டிப் பொருட்டால் ஒருகால் அவியாது

மண்டிஎரியும் பெரும் தீ மாற்றுதற்குத் திண்திறல்சேர்
வல்லார்கள் வல்ல வகையால் தொழில் புரிதல்
எல்லாம் உடனே ஒருங்கிசைந்து - செல்காலை
முட்டாமல் செய்வினைக்கும், முன் செய்வினைக்கும் செலவு

7. பட்டோலை தீட்டும்படி போற்றி!
... ... நல் ஓங்கு
இந்நிலைமை மானுடருக்கே அன்றி எண்ணிலா
மன் உயிர்க்கும் இந்த வழக்கேயாய் - முன்னுடைய
நாள் நாள் வரையில் உடல் பிரித்து - நல்வினைக்கண்
வாழ்நாளில் மாலாய் அயனாகி - நீள்நாகர்
வானாடர் கோமுதலாய் வந்த பெரும் பதத்து
நானா விதத்தால் நலம்பெறுநாள் - தான் மாள
வெற்றிக் கடும் தூதர் வேகத்துடன் வந்து
பற்றித்தம் வெம் குருவின்பால் காட்ட - இற்றைக்கும்
இல்லையோ? பாவி! பிறவாமை என்று எடுத்து
நல்லதோர் இன்சொல் நடுவாகச் - சொல்லி இவர்
செய்திக்குத்தக்க செயல் உறுத்துவீர் என்று
வெய்துற்று உரைக்க விடைகொண்டு - மையல் தரும்

செக்கினிடைத்டுதிரித்தும் தீவாயில் இட்டு எரித்தும்
தக்க நெருப்புத் தூண் தழுவுவித்து - மிக்கு ஓங்கு
நாராசம் காய்ச்சிச் செவி மடுத்துநா அரிந்தும்
ஈராஉன் ஊனைத்தின் - என்று அடித்தும் - பேராமல்
அங்கு ஆழ்நரகத்து அழுத்துவித்தும் பின்னும் தம்
வெம்கோபம் மாறாத வேட்கையராய் - இங்கு ஒருநாள்
எண்ணிமுதல் காணாத இன்னல் கடுநரகம்
பல்நெடுநாள் செல்லும் பணிகொண்டு - முன் நாடிக்
கண்டு கடன் கழித்தல் காரியமாம் - என்று எண்ணிக்
கொண்டுவரு நோயின் குறிப்பறிவார் - மண்டுஎரியில்
காய்ச்சிச் சுடஅறுக்கக் கண்உரிக்க நல்நிதியம்
ஈத்துத்தாய் தந்தை தமர் இன்புறுதல் - வாய்த்த நெறி
ஓடியதே ரின்கீழ் உயிர்போன கன்றாலே
நீடுபெரும் பாவம் இன்றே நீங்கும் என - நாடித்தன்
மைந்தனையும் ஊர்ந்தோன் வழக்கே வழக்காக
நஞ்சு அனைய சிந்தை நமன்தூதர் - வெம்சினத்தால்
அல்லல் உறுத்தும் அருநரகம் கண்டு நிற்க

8. வல்ல கருணை மறம் போற்றி!

... ... பல் உயிர்க்கும்
இன்ன வகையால் இருவினைக்கண் நின்று அருத்தி
முன்னைமுதல் என்ன முதல் இல்லோன் - நல்வினைக்கண
எல்லா உலகும் எடுப்புண்டு எடுப்புண்டு
செல்காலம், பின்நரகம் சேராமே - நல்லநெறி
எய்துவதோர் காலம் தன் அன்பரைக்கண்டு இன்புறுதல்
உய்யுநெறி சிறிதே உண்டாக்கிப் - பையவே
மட்டாய் மலராய் வருநாளில் முன்னைநாள்
மொட்டாய் உருவாம் முறைபோலக் - கிட்டியதோர்
நல்ல பிறப்பில் பிறப்பித்து நாடும் வினை
எல்லை இரண்டும் இடைஒப்பில் - பல்பிறவி
அத்தமதில் அன்றோ அளவு என்று பார்த்திருந்து

9. **சத்தி பதிக்கும் தரம் போற்றி!**

... ... முத்திதரு
நல்நெறி விஞ்ஞானகலர் நாடும் மலம் ஒன்றினையும்
அந்நிலையே உள்நின்று அறுத்தருளிப் - பின்அன்பு
மேவா விளங்கும் பிரளயாகலருக்குத்
தேவாய் மலகன்மம் தீர்த்தருளிப் - பூவலயம்

தன் நின்று நீங்காச் சகலர்க்கு அவர்போல
முன் நின்று மும்மலம் தீர்த்து ஆட்கொள்கை - அன்னவனுக்கு
ஆதிகுணம் ஆதலினால் ஆகும் திருத்தொழிலும்
சோதி மணிமிடற்றுச் சுந்தரமும் - பாதியாம்
பச்சை இடமும் பவளத் திருச்சடை மேல்
வைச்ச நதியும் மதிக் கொழுந்தும் - அச்சம் அற
ஆடும் அரவும் அழகார் திருநுதல்மேல்
நீடு உருவவன்னி நெடும் கண்ணும் - கேடுஇலயம்
கூட்டும் தமருகமும் கோல எரியகலும்
பூண் அரவக் கச்சும் புலி அதளும் - வீட்டுஇன்ப
வெள்ளத்து அழுத்தி விடும் தாளினும் அடியார்
உள்ளத் தினும்பிரியா ஒண்சிலம்பும் - கள்ளவினை
வென்று பிறப்பறுக்கச் சாத்திய வீரக்கழலும்
ஒன்றும் உருத் தோன்றாமல் உள்அடக்கி - என்றும்
இறவாத இன்பத்து எமை இருத்தவேண்டிப்
பிறவா முதல்வன் பிறந்து - நறவாரும்

தார் உலாவும் புயத்துச் சம்பந்த நாதன்என்று
போ்இலா நாதன்ஒரு பேர் புனைந்து - பாரோர்தம்
உண்டி உறக்கம் பயம் இன்பம் ஒத்து ஒழுகிக்

10. கொண்டு மகிழ்ந்த குணம் போற்றி
... ... மிண்டாய
ஆறு சமயப் பொருளும் அறிவித்து அவற்றில்
பேறு இன்மை எங்களுக்கே பேறு ஆக்கித் - தேறாத
சித்தம் தெளியத் திருமேனி கொண்டுவரும்
இத்தகைமை தானே அமையாமல் - வித்தகமாம்
சைவ நெறியில் சமய முதலாக
எய்து அபிஷேகம் எய்துவித்துச் - செய்யதிருக்
கண் அருளில் நோக்கிக் கடிய பிறப்பால்பட்ட
புண்ணும் இருவினையும் போயகல - வண்ணமலர்க்
கைத்தலத்தை வைத்தருளிக் கல்லாய நெஞ்சுருக்கி
மெய்த்தகைமை எல்லாம் விரித்து ஓதி - ஒத்து ஒழுகும்
சேணார் இருள்வடிவும் செங்கதிரோன்பால் நிற்பக்
காணாது ஒழியும் கணக்கேபோல் - ஆணவத்தின்
ஆதி குறையாமல் என்பால் அணுகாமல்

11. **நீதி நிறுத்தும் நிலை போற்றி!**

... ... மேதக்கோர்

செய்யும் சரியை திகழ் கிரியா யோகத்தால்
எய்தும் சீர் முத்திபதம் எய்துவித்து - மெய்அன்பால்
காணத் தகுவார்கள் கண்டால் தமைப் பின்
நாணத் தருஞான நல்நெறியை - வீணே
எனக்குத் தர வேண்டி எல்லாப் பொருட்கும்
மனக்கு மலர்அயன் மால் வானோர் - நினைப்பினுக்கும்
தூரம்போல் அணிய சுந்தரத்தாள் என்தலைமேல்
ஆரும் படிதந்து அருள்செய்த - பேராளன்
தந்தபொருள் ஏது என்னில் தான்வேறு கான்வேறாய்
வந்து புணரா வழக்கு ஆக்கி - முந்தி என்தன்
உள்ளம் என்றும் நீங்காது ஒளித்திருந்து - தோன்றி நிற்கும்
கள்ளம் இன்று காட்டும் கழல் போற்றி வள்ளன்மையால்
தன்னைத் தெரிவித்துத் தன் தாளினுள் கிடந்த
என்னைத் தெரிவித்த எல்லையின்கண் - மின்ஆரும்
வண்ணம் உருவம் மருவும் குணமயக்கம்

எண்ணும் கலைகாலம் எப்பொருளும் முன்னம் எனக்கு
இல்லாமை காட்டிப்பின் எய்தியவா காட்டி இனிச்

12. செல்லாமை காட்டும் செயல் போற்றி!
... ... எல்லாம் போய்த்
தம்மைத் தெளிந்தாராய்த்தாமே பொருளாகி
எம்மைப் புறம்கூறி இன்புற்றுச் - செம்மை
அவிகாரம் பேசும் அகம் பிரமக்காரர்
வெளியாம் இருளில் விடாதே ஒளியாய் நீ
நின்ற நிலையே நிகழ்த்தி ஒருபொருள் வேறு
இன்றி அமையாமை எடுத்து ஓதி - ஒன்றாகச்
சாதித்துத் தம்மைச் சிவம் ஆக்கி இப்பிறவிப்
பேதம்தனில் இன்பப் பேதம் உறாப் - பாதகரோடு
ஏகாய்ப் போகாமல் எவ்விடத்தும் காட்சிதந்து
போகமாம் பொன் தாளினுள் புணர்த்தி - ஆதியுடன்
நிற்க அழியா நிலை இதுவே என்று அருளி
ஒக்க வியாபகம் தன்னுள் காட்டி - மிக்கு ஓங்கும்
ஆனந்த மாக்கடலில் ஆரா அமுது அளித்துத்

தான் வந்து செய்யும் தகுதியினால் - ஊன் உயிர்தான்
முன்கண்ட காலத்து நீங்காத முன்னேனை
என்கொண்டு போற்றிசைப்பேன் யான்?

திருச்சிற்றம்பலம்.

குருவணக்கம்

போற்றி திருத்தில்லை போற்றி சிவபோகம்!
போற்றி அவன் மெய்ஞ்ஞானப்புண்ணிய நூல் - போற்றி எங்கள்
வெம்பந்தவாழ்க்கைவிட வேறாய் வந்து உள்நின்ற
சம்பந்த மாமுனி பொற்றாள்.

"போற்றிப் பல்தொடை' என்பது உயிர் தொழிற்படு முறைமை உணர்த்தும் வாயிலாகத் தமக்குச் சிவஞானம் நல்கிச் சிவானுபவம் ஈந்த குரு மூர்த்தியைப் பல்தொடை வெண்பாவினால் வாழ்த்திய நூல்.

உ

குருவருள்

உமாபதி சிவாசாரியார் அருளிச்செய்த

போற்றிப் பல் தொடை

(பழைய உரைத்தொகுப்பு)

நிறுத்தநிலை போற்றி! (1-4) பொன்போன்ற தாமரைப்பூவில் நிலைபெற்று, நான்கு முகங்களுடன் எழுந்தருளி இருக்கும் பிரமனும், தேவர்களும், அவர்களுடைய அரசனாகிய இந்திரனும், திருமகள் பொருந்திய, மார்பில் மிக்கஒளியினை உடைய, கௌத்துவ மணி அணிந்துள்ள திருமாலும், எல்லாப் பொருள் உண்மையினை நாவினால் சொல்லப்பெறுகின்ற வேதங்களும், வேதமுடிவான உபநிடதங்களும், அறிவனைத்தும் விளக்கம் செய்கின்ற விந்துவும், அதற்கு உள் ஒளியாகிய நாதமும், சூடிலையும், தத்தம் உள்ளத்தே தோன்றிய மெய்யறிவுச் செயல்களால் தம் ஆற்றல் முற்றுமாய்த்தேடியும் அளவுபடாமல் மிக்க தொலைவில் உள்ள பேரின்ப ஒளியாம் பரமன், ஆன்மாக்கள் உய்யும்படி, பெருங்கருணை காட்டி, எல்லோரும் பேரன்புடன் கண்டுகளித்து, மலமயக்கம் நீங்கித் தெளிந்து தேறும்படிக்கு, மிகுந்த இரத்தின மணிகள்

சூழ்ந்த ஒளிவீசும் அழகிய திருச்சிற்றம்பலத்துள், ஞான ஒளிநிறைந்து தோன்ற நின்று, ஆன்மாக்களின் பிறவித் தொடர்ச்சி அறுக்கும்வண்ணம் இன்ப மயமான நிருத்தநடம் எம்மைக் காத்தருளுக!

பெரியவழி போற்றி! (4-6) தோற்றம் ஒடுக்கம் இல்லாத என்றுமுள்ள அளவிலா ஆன்மாக்கள் வீடுவேறு அடைந்து இருக்கவும், குறைவில்லாமல் என்றுமாய், அளவிலா மல அழுக்குகள் நீங்காத சகலான்மாக்களைத் தத்தம் இருவினைக் கீடான உடல்களில், வியர்வை, முட்டை, கருப்பை, விதை ஆகிய நால்வகைத் தோற்றங்களிலும் மாறி மாறி வேறு வேறாகப் படைத்தும் அவ்வான்மாக்களுக்கு உள்ள அரிய வினைப்பயன்களை மிகாமலும், குறையாமலும் கூட்டி நுகரச்செய்தும் பேரூழிக் காலத்தில் ஆன்மாக்கள் மும்மலமாயக்கால் பிறந்து இறந்து அலைந்து திரிந்த இளைப்பு ஒழியும்படி காரணகேவல நிலைகளில் ஒடுக்குவித்தும் அளவிறந்த காலமாய் முதல்வனாய் நின்று படைத்தும், காத்தும், ஒடுக்கியும், அளவிறந்து முதல், நடு, ஈறு (முடிவு) என்ற மூன்றும் இல்லாத செம்பொருள்புரியும் ஐந்தொழில் எம்மைக் காத்தருளுக!

மீட்டறிவு காட்டும் வினை போற்றி! (6-13) என்றுமாய் உள்ள ஆன்மாக்கள், படைக்கப்பட்டும், காத்தருளப்பட்டும், ஒடுக்கப்பட்டும் வருவனவாய் உள்ளதன் காரணம் எண்ணி காலம் மலத்தால் கட்டுண்டு இருப்பதால் அம்மல அழுக்கு ஒழிய முழுமுதல்வன் கருணையினால் செய்யப்படுவதே ஆகும். ஆன்மாக்களின் மலக்கட்டு நெல்லுக்கு உமி, தவிடு, முளை புதுவதாயல்லாமல் என்றும் உளதாய் உடன் தோன்றியதே ஆகும். இதில் ஆணவமலம் ஆன்மாவின் அறிவை மறைப்பது, செம்பின் நிறத்தைக் களிம்பு செம்புடனே தோன்றி மறைப்பது ஒக்கும். எல்லாம் வல்லான் (வியாபகத்துள்) நிறைவுள் நிற்கும் ஆன்மாக்களை ஆணவமலம் மறைப்பது, பழம்பெரும் கடல்நிறைவில் நிறைந்துள்ள நீரை உப்பு உடனாய்க் கலந்து பிடித்திருப்பது போலாம். இவ்வாறு யாவும் வெவ்வேறாய், ஒருபுடை ஒப்பாய் பரமன் என்றுமுள்ள தன்மைஒப்ப ஆணவ மலம் என்று முளதாய் அருவமாய் மூவகை (ஒருமலத்தார், இருமலத்தார், மும்மலத்தார்) ஆன்மாக்களையும் பிடித்து, உருவமாய், உயர்ந்ததாய் ஒளிவீசும் மாணிக்க மணியை நஞ்சுள்ளவாய்க்குள் அடக்கியுள்ள மா நாகம் போலவும், பச்சையாய் முளைத்து விறகு ஆகும்வரை தீயினைத்தெரிய வொட்டாமல் உள்ளே மறைத்து வைத்திருக்கும் விறகு போலவும், ஆன்மாக்களின் அறிவுக்கண்ணினை

மறைக்கும் கடுந் தொழிலை உடைய ஆணவ மலத்தினாலே அறிவும் செயலும் மாண்ட அனைத்து ஆன்மாக்களுக்கும் பரமன் கருணையினாலே இனிதே அவர்களின் விருப்பம் அறிந்து பிறவிக் குருடருக்கு அவர்பால் அன்புகாட்டுபவர் விரும்பியவாறு ஊன்றுகோலைக் கொடுத்து விரும்புமிடங்களில் கொண்டு சேர்ப்பதுபோல அறிவினை மறைக்கும் பொலிவுடைய மாயையின் காரியப்பாடான உடல், கருவிகள் உலகு, நுகர்வுகளை உண்டாக்கி, விரும்பிய உலகில், விரும்பிய இருவினை நுகர்வுகளை நுகரச்செய்யும் காலத்தும், அந்த மூலமலமயக்கால் பரமன் பெருங்கருணையை மறந்து, தன் முனைப்பாம் உள்ளிருக்கும் கருவிகள் செய்கையால் இன்ப துன்பம் அடைந்து, நல்வினை தீவினை இரண்டும் உளவாகும் வண்ணம் காட்டி, அந்த இருவினை காரணமாய் பிறந்திடும் பிறவியாக்கி, அதனால் செய்யப்பெறும் இருவினைகளையும் ஏன்றுகொண்டு மீண்டும் மீண்டும் அந்த வினையால் விளையும் பயனை நுகர்வதற்கு கலை முதலான அறிவுகளைக் காட்டும் கருணைத் திறம் எம்மைக் காப்பதாக!

பொய்யாத தலைவன் வல்லபமே போற்றி! (13-19) எல்லாம் உடையான் ஆன்மாக்களுக்கு வினைகாரணமாய் இன்ப துன்பங்கள் நுகர்வதற்கும், அம்முறையிலேயே ஏற்ற பெற்றி உடல்களைக் கூட்டும்

வகை சொல்லப்புகின் முன்னர் ஆகமங்களிலே உணர்த்திப்பெற்ற எண்பத்து நூறாயிரம் பிறப்புவகைகளெல்லாம் அவ்வவற்றின் இருவினைக் கீடாகத் தோன்றும்படிக்கு திருவுள்ளம் கொண்டு பலவகை வேறு வேறுபாடுள்ள உடல்களை உண்டாக்குவதும், மானுட உடல் உண்டாக்குவதும், அழகமைந்த தந்தை தாய் இருவரும் இன்பவேட்கை தீரும் வண்ணம் ஒன்றாய்ப் புணர்ந்த காலத்து அவர்களுக்கு மகப்பேறு உண்டு இல்லை என்பதறிந்து தாயின் கருப்பையில் தந்தையின் விந்து (புல்நுனியில் தங்கிய பனித்துளிஒப்பது) விடும்போது அதனுள் உயிரை அடக்கி உள்ளே கருவறைச் சுரோணிதத்துடன் கலக்குமாறு செய்து அந்த விந்து தாய் வயிற்றில் அளவற்றுள்ள வயிற்றுக்கனலால் வற்றாமல் படியும் தாய் வயிற்றுள் கிடக்கும்அநாதி உயிர்களாகிய புழுக்கள் பசியினால் உள்புகுந்தவிந்துவை உண்ணாமல்படிக்கும் கருப்பையாம் கும்பிநரகக் குழியில் காத்திருந்து, புகுந்த உயிரின் வினைக்கீடான கை, கால் முதலான உறுப்புகள் குறை இன்றி அழகுபொருந்தத் திருத்திப் பின்பு அவ்வுடலை எடுத்து நேரே யோகத்தில் இருத்தி முக்கால செயல்பாடுகளையும் அறியுமாறு உணர்வும் தந்து பத்துமாதங்கள் வரை உணவும் கொடுத்துப் பின் மண்ணில் பிறக்குங்கால் இரு கைகளையும் உச்சிமீது குவித்த

வண்ணம் தலை கீழாய் வரும்படி செய்து முன் புகுந்த வழியைப் பெருவழியாக்கி அவ்வுயிர் துன்புற்று இறவாமல்படிக்கு உயிருக்கு உயிராய் அணைத்திருந்து வெளியிலே இழுத்துக்கொண்டு வருகின்ற மெய்ம்மையாகிய அருளாற்றல் மிகு கருணை எம்மைக் காப்பதாக.

நேசத்தை வைத்த நெறி போற்றி! (19-22) தாயின் வயிற்றை விட்டு நீங்கி மண்ணில் குழந்தை பிறந்த உடனே உடல் தோன்றுவதற்குக் காரணமான மாயையானது சூறாவளிபோல் அலைத்து மயக்க, முன்பு கருப்பையினுள் வாழும் போது இப்பிறவித்துன்பத்தை நீக்கிக் கொள்ளவேண்டும் என்று அங்கிருக்கையில் எண்ணிய நல்ல நினைவினை முற்றாய் மறந்து உயிர் உடலளவில் ஒன்றாய் நல்வினை தீவினைத் தொடர்ச்சியால் பகுத்தறிவிழந்து அச்சமயம் உயிர் நுகர்வில் விருப்பம் கொண்டுள்ளதை அறிந்து பசியினை உணருமாறு செய்வித்து குழந்தை கதறி அழும்படி செய்வித்து, தம் குழந்தை அழுவது கண்டு உடனே குழந்தை பிறக்கையில் நேர்ந்த துன்பத்தையும் தாய் மறந்து உட்கி உயிர் தளரும் படி உள்ளே நடுங்கி, மிகும் அன்பினால் அவள் மனமிரங்கி உருகியபோது, பசும் உடலில் இருந்த இரத்தம் நிறம்மாறி வெண்ணிற அமுதமாய் முலையில் வந்து சுரக்கும் அத்தீம் சுவைப் பாலைக் குழந்தை

வாய் வைத்து குடித்து முகம் மலர்ந்திருப்பது கண்டுதாயும் மகிழ்ந்து இருக்கும்படி செய்வித்து இப்படி குழந்தை மீது வைத்த ஆசையெனும் பெருங்கயிற்றால் கட்டி எல்லா உயிர்களுக்கும் குழந்தைகளை வளர்க்கும்படி எல்லா உயிர்கள்யாவற்றுக்கும் அன்புடைமை அருளிய நெறி எம்மை காப்பதாக.

பண்டாரியானபடி போற்றி! (22-24) தாய் ஒத்த அன்புகாட்டிக் காத்தருளும் பெருமான் பிறப்புக்கு ஆளாகும் ஆன்மாக்கள் கருப்பையில் இருக்கின்ற பசும் குழவிப் பருவத்தும், பிறந்து பாலனாயுள்ள அக்காலத்தும் நாளுக்கு நாள் மாற்றமுடன் வளர்கின்ற இளம் பிள்ளை, காளை, மூத்தபருவத்தும் மும்மல வாதனைக்கு ஆளாக்கி அவ்வப் பருவத்துக்கு ஏற்ப கலை முதலான அறிவு அளித்து தனக்கெனச் செயலற்ற ஆன்மாக்கள் அவற்றினைப் பெறுவதற்கு ஏற்ப முப்பத்து ஆறு அகப் புறத்து கருவிகளையும் கொடுத்து உயிர்க்கு உயிராய் இமைப் பொழுதும் நீங்காமல் நின்று பக்குவமுறும் உயிர்க்கு ஏவலாய்ச் செய்யும் பெருங் கருணை எம்மைக் காப்பதாக.

தொழிலுக்கு உரியர் ஆக்கிப் பணித்த அறம் போற்றி! (24-35) உடையவன், அடியவர் ஏவல்புரிதல்போல நின்று தத்துவங்களைக் கொடுத்துக் காக்கும் விதம், ஒழியாது தொடர்கின்ற புன்புலால் நாறும்

தோல் மூடிய புழுக்கூடான உடலாகிய பெரிய வீட்டினுள், தன்தனிப்பெரும் கருணையினால் துரியாதீதம், துரியம், சுழுத்தி, கனவு, நனவு ஆகிய பெயருடைய ஐவகைக் கட்டு ஆக்கி உயிருக்கு என்றும் உடனாய் நின்று மறைப்பொழியாமல் செய்து வரும் ஆணவ மலம் நீங்காமல் வலிவுடன் உயிரைச் சிறை செய்து நிற்கும் மூலாதாரமாகிய வீட்டில் மிகவும் உயிர் அறிவற்று மூடமாய் உயிர் கிடப்ப அவ்விடத்தில் இளைப்பாறு மட்டும் காலத்தை நியதிதத்துவத்தினால் நிறுத்தி, மிக்குவிளங்கும் துரிய மென்னும் நாபித் தான வீட்டில் ஆன்மாவைப் பிராண வாயுவுடன் கூடுமாறு செய்து அங்கு கலை வித்தை, இராகத்தினால் ஆன்மாவின் தொழில் , அறிவு, இச்சை, மூன்றையும் செயற்படுத்த அதற்குத் துணையென பிரகிருதிமாயையில் தோன்றும் அழகுடன் விளங்கும் சாத்துவிகம், இராசதம், தாமதம் என்னும் முக்குணங்களையும் கூட்டி, மேலே சுழுத்தி வீடாகிய இதயத் தானத்தில் சித்தக் கருவியுடன் கூட்டி அங்கு சித்தத்தால் கண்டபொருள் இன்னதென்று அறியாமல் மயங்கி நிற்கும் உயிரைக் கனவு வீடாகிய் கண்டத்தில் சேர்த்து அங்கு சத்தாதி ஐந்தும், வசனாதி ஐந்தும், உட்கருவிகள் நான்கும், வாயுக்கள் பத்தும், புருடனுடன் இருபத்தைந்து கருவிகளையும் கூட்டி முன்செய்த இருவினைக்கீடாக முன்பு

உயிர்களுக்கும் இதே முறைமையாக வினைகளை உறுதியுடன் அறிந்து, முன் அமைத்த வாழ்நாள் முடிவில் உடல்களைப் பிரிந்து நல்வினை ஈட்டிய உயிர்களை எல்லாம், மேலான உடல்களுடனே நீண்ட வாழ்நாளுடையனவாய் திருமால் உலகில் திருமால் உருவாய் அயன் உலகில் அயன் வடிவாகவும் வானவர் உலகில் வானவர் கோனாயும் பிறந்து அவ்வப் பதவிகளில் அமர்ந்து, அவற்றிற்குண்டான பலவகை இன்பங்களை நுகரும்படிச் செய்வித்தும் இவ்வுலகிலும் அரச போகங்களுடன் வாழும்படி செய்வித்தும் அந்தந்த ஆன்மாக்களின் நல்வினை முடியும் கால எல்லைவரை அங்கங்கே இருத்தி, அக்கால முடிவில் எஞ்சியுள்ள தீவினைப் பலன் நுகரும் பொருட்டு அங்கங்கு வாழ்ந்திருந்த உயிர்களை அந்தந்த உடல்களை விட்டு மாறும்படிக்கு உடையான் ஆணையினலே வெற்றியுடைய இயமதூதர்கள் வேகமாக வந்து பரித்தினால் கட்டிப்பிடித்துக்கொண்டு போய்த் தங்கள் தலைவனும் தருமராசாவின் முன்பு விடவும், அத்தருமராசா அவ்வான் மாக்களை இரக்கமுடன் நோக்கி, 'பாவிகாள்! உங்களுக்கு இன்றுவரை பிறவாநெறி பெற வேண்டும் என்று உடையான்பால் வேண்டும் உணர்வு பிறக்கவில்லையோ?' என்று இனிதாக நடுநிலைமையாக கூறிப் பின்பு

அவர்கள் செய்த தீவினைக் கேற்பச் செயல்புரியுமாறு சினந்து தண்டனை புரிபவர்களைப் பார்த்துச் சொல்லவும், அவர்கள் விடைபெற்று நுண்ணுடல் யாதனா உடலில் அந்த உயிர்களை நிறுத்தித் துன்பமுறும் படி, செக்கில் இட்டு ஆட்டியும், தீவாயில் இட்டு எரித்தும், பெரிய நெருப்புத் தூணைத் தழுவிக்கிடக்கும்படி செய்தும், மிக்க நீண்ட இரும்புக்கம்பிகளைக்காய்ச்சி காதிலே செலுத்தியும், நாக்கைக் கருவி கொண்டு அறுத்தும், அவரவர் ஊனை அவரவரே உண்ணும் படி அரிந்து கொடுத்தும், அடித்தும், மீளாகடும் நரகங்களில் அழுத்துவித்தும், பின்னும் தம் கடுஞ்சினம் மாறா இயல்பினால் அந்த நரகங்களில் கொடும் துன்பம் பல நாள் அனுபவிப்பதை கருணையே வடிவாக உள்ள உடையான் காணவில்லையோ என்றால் உலகில் பெற்றோர் தம் பிள்ளையின் நோய் பற்றிய உள்ள நிலையை நாடி அறிந்து நோய் தீரும்படிக்கு உரிய மருத்துவம் செய்ப்பது கடமை என்று மருத்துவரிடம் ஒப்புவித்து அம்மருத்துவர் நோய் காரணமாய் காய்ச்சிய இரும்பால் சுட்டும், கத்தியினால் அறுத்தும் கண்படலக் குறைவை உரித்தும் பல வகையான செயலால் பிள்ளை துன்புற்றாலும், நோய் தீரும் படிசெய்த அம்மருத்து வனுக்கு நல்ல வெகுமதி அளிப்பது போலவும், மனுநீதிச் சோழன் தன் மகனால் தேர்க்காலில்பட்டு கன்றினையிழந்த தாய்ப் பசுவின் துயர்

துடைக்கவும் தன் மகனால் நேர்ந்த தீவினைக்கு ஈடாக, பலரும் மாறுபட்டுத் தடுத்தும், தவத்தால் பெற்ற தன் ஒரே மகனைதிருவாரூர்த் ருவிலே பசுங் கன்று உயிரிழந்த படியே தாய்ப்பசுவை தேரில்வைத்துக் தேரினைச் செலுத்தி கொன்றது யமன் தன் பிள்ளையைப் படித்துக் கொண்டு போய் நரகில் துன்புறுத்தாவண்ணம், நீதி நிலை நிறுத்தும் அவ் வழக்கேபோலவும் விடம் போலும் எண்ணமுடைய இயமன் தூதர் சினத்துடன் கொடிய நரகத்துன்பம் தருவதை ஆன்ம கோடிகள் அனைத்திற்கும் அம்மையப்பனாய் (சிவமும் அவனருளும்) இருந்து அவற்றின் மும்மல நோய் அகலப்பண்ணி அகமகிழ்ந்து உடனாயிருந்து காணும் குறையாத ஆற்றல் மிகு மறக் கருணைத் திறம் எம்மைக் காப்பதாக.

சத்தி பதிக்கும் தரம் போற்றி! (53-59) உடையான் இவ்விதம் பலவகையினும் காத்தருளப் பெற்ற ஆன்மாக்களுக்கு மும்மலக் கட்டு நீங்கும் வீரை இருவினைப் பயன்களை அவன், அவள், அது முன்னிலையாக நிறுத்தி, நுகரச் செய்து இணையிலியாய் உள்ள தலைவ னாகிய பரசிவம் அவற்றின் இருவினைகளுக்கு இருப்பிடமான மாயா காரிய உலகுகளை மீண்டும் மீண்டும், மாறி மாறிவரும்படியாயும் அவைகளுக்கு முதலும் முடிவுமாய் நின்று படைப்பு, காப்பு, துடைப்பு, மறைப்பு

திருவருள் பாலிப்பு ஆகிய ஐந்தொழில்கள் தம் சத்தியினால் செய்வித்தும், மலபரிபாகம் (சமநிலை) எய்திய ஆன்மாக்கள் நரகு அடையாமல்படி மும்மலக்கட்டை நீக்கி, அவைகளுக்கு முத்தியருளும் காலத்தை உண்டாக்க வேண்டித் தன்பால் மீதூர்ந்த அன்புடைய மெய்யடியார்களைக் கண்டதும், சிவபரம் பொருளே காட்சி தந்ததாக எண்ணி இன்புற்று அவர்க்கு ஆம் பணிசெய்தும் அவர் ஏவினவற்றை முடித்தும், உய்யும் வகை சிறிது காட்டி, செல்லும் நல்வழி இதுவே எனத் தேர்ந்து, சிவபுண்ணிமாய்க் கருதி அறிவறிந்து அல்லாமல், அறியாதபடியும் தொடக்கச் சரியை முடிந்தநிலை சரியையிலும், முன்கூறியவாறே செய்வித்தும் அந்த மொட்டாய் மலரவிருக்கிற அரும்புப் பருவம் நீக்கி வரும் பருவத்திற்கு முன்னால் மொட்டாயிருக்கின்ற மலர் போல் மலபரிபாகம் உற்ற தன்மையைக் கண்டு நிகரிலா நல்ல சமயமாம் சிவ சமயத்தில் பத்தி மிகுந்த இடத்தில் பிறப்பித்தும் ஈட்டிய இருவினை தராசுநுனி போலச் சம நிலைப்பருவத்தே பிறஅற தம் ஆற்றல் மிகு திருவருட்சத்தியை அந்தந்த ஆன்மாக்களின் மலம் நீங்கும் படி பொருந்தச் செய்யும் உயர்கருணை எம்மைக் காப்பதாக.

ஒத்து ஒழுகிக் கொண்டு மகிழ்ந்த குணம் போற்றி! (59-71) முறை முறையே இருவினைச் சமநிலை, மலபரிபாகம், அருட்சக்தி இறங்கி

பதிதல் பெற்ற பக்குவ ஆன்மாக்களுக்கு உடையவன் குருவடிவாய் திருவருள் பாலிக்கும் முறைமையாவது, முத்தியினைக் கொடுக்கு மாறு அறிந்த விஞ்ஞானகலருக்கு (ஒருமலத்தார்) அவர்களைப் பற்றி நிற்கும் ஆணவமலத்தினையும் அவர்கள் அறிவுக்குள் பேரறிவாய் ஒளிவீசி அம்மல இருளை நிக்கி, அருள் வடிவம் பெறச்செய்து அன்பறாது அதிலேயே அழுந்துமாறு அருளுவார். பின்பு அன்பு பொருந்தி விளங்கிய (இருமலத்தார்) பிரளயாகலருக்குத் திருவுருவினைக் காணும் படிக்கு, மான், மழு ஏந்தி நான்கு கரங்களுடன் நீலகண்டமும் முக்கண்ணும் உடைய திருமேனி கொண்டிருந்து அவர்களைப் பற்றி நிற்கும் ஆணவ மலம், கன்ம மலம் இரண்டினையும் நீக்கி அருளுருவமாகச் செய்து அன்பிலே அழுந்தும் படி அருளுவார். அசுத்த மாயையில் தோன்றி பூவுலகை விட்டு நீங்காமல் உள்ள (மும்மலத்தார்) சகலருக்கு அவர்கள[illegible]ப் போல மானுட உருவில், மானைக் காட்டி மானைப் பிடிப்பதுபோல், முன்நின்று காட்சி தந்து அவர்களைப் பற்றியுள்ள ஆணவம் கன்மம் மாயை ஆகிய மும்மலங்களையும், அருட்கொடை முதலிய வழக்கின்படி நீங்கச்செய்து அருளுருவாக்கி அடிமைகொண்டு இன்பமருளுதல் உடையானுக்கு பழமைக் குணமாதலால், தில்லையில்,

நிருத்த நடனம் புரியும் ஐந்தொழிலும், ஒளிமிக்க நீல மணிபோன்று விளங்கும் நீலகண்டமும், இடப்பாகம் தம்பாகமாகத் திகழும் பாதிபச்சைத் திருவுருவாய் சிவகாமி அம்மை தங்கிய திருவுருவும் பவளக் கொடிபடர்ந்து கிடப்பது போன்று திருச்சடையில் சூடியுள்ள கங்கையும், இளநிலா வளைவும், அச்சம் தரும் படம் விரித்தாடும் நாகமும், அழகு மிக்க திருநுதல் நடுவில் மேல் நோக்கி நீண்டு ஒளிவீசும் நெருப்புக்கண்ணும் வலக் கையில் பிடித்துள்ள, குறைதலில்லா இலயத்துடன் ஒலிக்கும் உடுக்கையும், அழகு பொருந்திய இடக்கையில் பிடித்திருக்கும் நெருப்புக் குண்டமும், திருவரையிலே கட்டியிருக்கும் ஐந்தலை நாகக்கச்சும், புள்ளியுடைய புலித்தோல் உடையும், பக்குவமுற்ற உயிர்களை வீட்டின்பப் பெருவெள்ளத்தே அழுத்துதற்கு ஊன்றிய திருவடியிலும், நீங்காப் பேரன்பர் உள்ளத்திலும் கலந்து நிறைவாய் உள்ள ஆடும் திருவடியினும் பிரியாமல் பூண்டுள்ள ஒளி பொருந்திய திருவடிச் சிலம்பும், உயிர்களை மறைந்து நின்று கள்ளதனமாய் தன் வசமாக்கும் பண்டைவினையை வென்று தொடர்ந்து வருகின்ற பிறவித் துன்பங்களை அறுத்து ஒழிப்பதற்கு மலப் பகைதாமென்று முழந்தாளில் பூண்டிருக்கும் வீரகண்டா மணியும், இவைகளில் ஒன்றும் உருத்தெரிய

ஒட்டாமல் உள்ளே அடக்கி ஒளித்துக் கொண்டு முடிவில்லாப் பேரின்பப்பேறு எம் போல்வாரையும் அடைவிப்பான் வேண்டி பிறவாளுக்கைப் பெரியோன் பிறந்து வந்தான் என்று வியந்து கொள்ளும் படிக்குத் திருவுருக் கொண்டு, தேன் பொருந்திய செங்கழுநீர் மாலை உலாவும் தேர்களை உடைய மறை ஞானசம்பந்தன் நாதன் என்று ஒரு பெயரும் தனக்கு அமையாத தலைவன் ஒரு பெயரும் பூண்டு, உலகவர் போல உண்டும், உடுத்தும், உறங்கியும், அஞ்சியும், விடய நுகர்ச்சி பெற்று இன்புறும் ஒத்தோழுகிக் கொண்டு எழுத்தருளி மகிழ்ந்து இருந்த அருட்குணம் எம்மைக் காப்பதாக.

நீதி நிறுத்தும் நிலை போற்றி! (71-78) இவ்வண்ணம் மானுடரை பக்குவம் கண்டு அவரைப் போன்றே ஒரு திரு மேனி தாங்கி ஆசாரிய வடிவாய் பெண்ணாகடத்தின்கண் எழுந்தருளி, எங்களுக்கு ஆணவ மலவலி குறைய வழிகோலாப் புறச் சமயப் பொருள்களெல்லாம் அறிவித்து, அவற்றால் யாதொரு பயனுமில்லை என்று தெளியும் திறமே ஒரு பேறாய் நிகழ்வித்து, திகைப்புறும் எம், சித்தம் தெளியும்படிக்குத் திருமேனித் திருக்காட்சி அருளிய அத்தகைமையும் நீங்காமல் மேம்பட்டு

விளங்கும் மெய்கண்டமரபு சுத்த சைவ நெறியில் விட்ட குறையறிந்து, சமயம், விசேடம், நிருவாணம், பொருந்தப்பெறும் அபிடேகம் என்னும் நால்வகையாம் அருட்கொடைகளையும் வழங்கி செந்தாமரை போன்ற திருவருட் கண்ணோக்கம் அருளி, துன்பமே பிறவியெனும் புண்ணுக்குப் துன்பமும், இருவினையால் அடையும் துன்பமும் உயிரை விட்டொழிய, அழகுமிகு தாமரை ஒத்த திருக்கைத் தலத்தைத் தலைமீது வைத்தருளி, கல்போலும் நெஞ்சதனை தீசேர் மெழுகு ஒப்ப உருகச்செய்து, முப்பொருளுண்மைகளை விரித்து ஓதி, அருள்பாலித்து ஒற்றுமையால் வானின் மறைத்த புற இருளானது, வானில் செஞ்ஞாயிறு உதயமானவுடன் இருள் நீங்கப் பெற்ற வான், சூரியனின் ஒளிவடிவாகி நிற்கும் முறைமை போல, அருள்பாலித்த ஞான ஒளியினைப் பற்றி நின்று மும்மல அழுக்கும் நீங்கி ஆன்ம அறிவு திருவருளில் அடங்குமாறு செய்து, அம்மலம் ஆன்ம அறிவினையும் பற்றாமல், தன்னுடைய அநாதி முறைமையான பழமையும், கெடாமல்படி, நடுவாக நின்றருளும் நிலைமை எம்மைக் காப்பதாக.

(78-84) கள்ளம் காட்டும் கழல் போற்றி! உலகப் பற்று ஒழிய உய்யும் நெறி கூடுவதற்காம் அடிமைநெறி, மகன்மை நெறி, தோழமை நெறி, (சன்மார்க்க) மெய்மையாம் குருவருள் நெறி எனப்பெறும் நான்கு வழியிலும் நின்று உண்மைச் சரியை, கிரியை, யோகங்களை நெறிப்படி கடைப்பிடித்து ஒழுகும் அடியார்கள் சிறப்புமிகு பதமுத்தியாம் சிவஉலகு, சிவனருகு, சிவ உரு எய்தும்படி செய்வித்து, அதன்பயனாய் ஞான வேட்கை உள்ள அடியவர் அருளைப் பெற்று மெய்யன்பினாலே சிவஉருவில் ஆன்மாவின் இயல்பு அடங்கியிருப்பதைக் கண்டு, சிவக்காட்சியில் ஆன்மாவின் தன்னியல்பை அறிந்து பின்னர் கட்டுநிலை, வீட்டுநிலை இரண்டிலும் கைம்மாறு கருதாது உதவுகின்ற உடையவன் கருணையை மறந்து தாம் ஒரு முதல் என்று எண்ணியிருந்ததை உணர்ந்து வெட்கி, நாணி, பதைப்பின்றி அருளில் அழுந்தி (சிவம், ஆன்மா என்ற இரண்டும் கடந்து) வேறின்றி நுகரும் சிவப் பேரின்பத்தை, தடுமாற்றம் உற்றபோதும் 'சிவ சிவ' என்று நினையாத எனக்கும் வீணே இரங்கி அருள வேண்டி, வேதம், ஆகமம்,

புராணம், சாத்திரங்கள் கூறும் எல்லாப் பொருளுக்கும், மனமாம் கருவிக்கும் தாமரையில் வீற்றிருக்கும் பிரமன், திருமால் முதலான தேவர்கள் நினைப்புக்கும், எட்டாத தூரம் போல தின்றும், உயிர், உயிரில் பொருள்களினிடத்தினும், நெருங்கி நிறைந்துள்ள, அழகுள்ள சீரார் திருவடித்தாமரைகளை, அடியேன் முடி மீது இருந்து ஒளி வீசும்படி வைத்துப்பரிபரிய தேவ தேவன் என்னும் பெயரை உடைய மறைஞான சம்பந்த ஞானாசிரியர், எனக்கு அருளிய பொருள், தான்வேறு நான் வேறாய் வந்து பொருந்தினதில்லை என்னும் வழக்காற்றினை உணர்த்தி எண்ணிலாத காலம் முதல் உன்னிடமாக ஒளித்திருந்து நீ நம்மைக் காணாதிருப்ப நாம் என்றும் உன்னைக் கண்டு கொண்டிருந்தோம் என்கிற ஒளிப்பதனை இப்போது உயிர்க்கு உயிராய் ஒளி வீசிநின்று அறிவித்த திருவடிகள் எம்மைக் காப்பதாக.

செல்லாமை காட்டும் செயல் போற்றி! (84 - 87) உயிர்க்கு ஆக்கம் தரும் தனிப்பெரும் கருணையினால் உடையவன் தன்னை அறிவித்தருளி தன் திருவடித்தாமரையான திருவருளுக்குள்ளே பிரியாது என்றும் கிடந்த என்னையும் எனக்கு அறிவித்த எல்லைக் கண்,

மின்போன்று தோன்றி அழிகின்ற இயல்புடைய உடலும், உடலைச் சார்ந்த முக்குண மயக்கங்களும், அறிவை விளக்க உணர்த்திய கலை, காலம் முதலாய தத்துவங்களும் முன்தோன்றாத கேவல நிலையை முன்னே அறிவித்துப் பின்பு உடல் முதலிய கருவி கரணாதிகளும் கூடின மலப்பிணிப்பு நிலையினையும் அறிவித்து இனி அருளை நீங்கி உடல் முதலான கருவி கரணாதிகளில் செல்லாவண்ணம், தூய நிலையினையும் அறிவித்த திருவருட்செயல் எம்மைக் காப்பதாக.

என்றும் நீங்காப் பழையோன் ! (87 – 95) எல்லாத் தத்துவங்களையும் பொய்யென்று தள்ளித் தம்மை தெளிந்தோம் என்றும், தமக்குமேல் வேறொரு பொருளில்லை என்றும், சைவ சித்தாந்திகளுடன் கூடுவது கூடாது அவர்கள் தமக்குப் புறம்பு என்றும் பேசித் தன் இன்பத்தைத் தானே நுகர்ந்திருப்போம் என்று மகிழ்வுற்று செவ்விதான மாறுபாடு அற்றவன் தாமே என்றுபேசி அகமே பிரமம் என்னும் வாதிகள் தன்னையும் அறியாமல், தன் தலைவனையும் அறியாமல் மயங்கி நிற்கின்ற வெளிபோலும் இருளதனில் என்னை விடாது, ஞானமே உருவ

ஒளிவடிவாய், இன்று நீநிற்கிற நிலை என்று உணர்த்தி, இதற்குமேலே வேறொரு பொருள் இன்றியமையாமையும் எடுத்தோதி, ஆன்மாவினை சிவத்துடன் இணைந்து ஒன்றாகும் வண்ணம் செய்து தம்மைச் சிவமாக்கி இந்த பிறவி வேறுபாடாகிய உடலின் கண்ணே ஜீவன் முத்தித் தன்மையும், பரமுத்தித் தன்மையும் உள்ளவாறு கண்டு, இன்பமேயாய சிவபோக நுகராது, சமவாதம் பேசி ஆன்ம சத்தியுடனே கூடி இன்பம் நுகர்வோம் என்கின்ற வீணர்களோடும் கூடி ஏகமாய்ப் போகாமல், எனக்கு எவ்விடத்தும் குரு, இலிங்க (சங்கமமாய்) சீரடியராய்க் காட்சி கொடுத்து, மேலான இன்பமாம் திருவருட்பொலியும் திருவடியில் நீங்காது அதனுள்ளே அடங்கிக் கிடக்குமாறு பொருந்துவித்து தூய அன்பில் அழுந்தி நிற்கும் மாற்றமுறா அத்துவிதநிலை இந்த அருள்நிலை என்று வேறுபாடுதோன்றாமல் அருளி, தமது முழுநிறைவாம் பரவெளியினுள் யானும் நிறைந்து நிற்கும் தன்மையும்காட்டி, மிகுந்தோங்கி அளவுகடந்து, நிறைந்து நின்ற தம்பேரின்பத்திருவருட் கடலில் விளைந்த நிறைவாம் அன்பாம் அமுதினை உண்டு இனிது இருக்கும்படி தாமே என்னைத்தேடி

வந்து கொடுத்த பெருங்கருணைத் தகுதியினால் ஊனுயிர் தானே முதன்மையென்று நின்ற கட்டுநிலையிலும், அதற்கு முதன்மையும் கொடுத்து நீங்காது நிற்கும் முன்னோனை எந்த விதம் கொண்டுயான் புகழ்ந்து போற்றுவேன்.

❁

வாழ்த்துரை :

அழகிய தில்லை நகர் எம்மைக் காத்தருள்க! சிவப்பேரின்பம் எம்மைக் காத்தருளுக! அவன் அருளிய மெய்ஞ்ஞானப் புண்ணிய நூல் எம்மைக் காத்தருளுக! எம் தீமைதரும் விருப்பு வெறுப்புகளுக்கு வேறாகிவந்து உள்ளே எழுந்தருளியிருந்த சம்பந்தமா முனியின் அழகிய திருவடிகள் எம்மை காக்கக் கடவதாக!

மெய்கண்ட தேவர்

பண்டை மறை வண்டு அரற்ற, பசுந்தேன்ஞானம்
பரிந்து ஒழுக, சிவகந்தம் பரந்து நாற,
கண்ட இதய கமல முகைகள் எல்லாம்
கண்திறப்ப, காசினிமேல் வந்த அருட்கதிரோன்
விண்ட மலர்ப்பொழில் புடைசூழ் வெண்ணெய் மேவும்
மெய்கண்ட தேவன், மிகுசைவ நாதன்
புண்டரிக மலர் தாழச் சிரத்தே வாழும்
பொற்பாதம் எப்போதும் போற்றல் செய்வாம்.

அருணந்தி சிவாசாரியார்

முப்பொருளின் ஈரியல்பும் ஓரியல்பா நுவலாது
முறைவெவ் வேறாய்ச்
செப்புசிவா கமங்களின்றன் பொருளொருமை பெறவுணர்த்து
திறமுன் னூலை
ஒப்பவிரி யாப்பதனாற் சித்தியெனும் வழிநூலாய்
ஒளிர்பிற் காலத்(து)
இப்புவியோர் தெளித்துய்ய மொழிந்தஅரு ணந்திசிவன்
இணைத்தாள் போற்றி!

மறைஞானசம்பந்த சிவம்

திருவளருஞ் சாமமறை திகழ்பரா சரன்மரபோன்
விரசுனர்பான் மறையுணர்வு விரிந்தொளிரப் புணர்ர்த்துவோன்
மருதமொடு கடந்தையையாள் மறைஞான சம்பந்த
குருமணிதன் மருமலர்த்தாள் குறித்துருகிப் பரசிடுவாம்.

உமாபதி சிவம்

அடியார்க் கெளியன் எனத்தில்லை
யண்ணல் அருளுந் திருமுகத்தின்
படியே பெற்றான் சாம்பாற்குப்
பரம முத்தி அப்பொழுதே
உடலுங் கரைவுற் றடைந்திடுவான்
உயர்தீக் கையினை அருள்நோக்காற்
கடிதிற் புரிகொற் றங்குடியார்
கமல மலரின் கழல்போற்றி.

பரம்பொருளின் எண்குணங்கள்

1. தன்வயத்தனாதல், 2. தூய உடம்பினனாதல், 3. இயற்கை உணர்வினனாதல், 4.முற்றும் உணர்தல், 5. இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், 6. பேரருள் உடைமை, 7. முடிவில் ஆற்றல் உடைமை, 8. வரம்பில் இன்பம் உடைமை.

அடிகளாரின் நினைவாஞ்சலிப் பா

அன்புருவாய் நின்று ஆறு நாளில் கண் இடந்து அப்பி
மன்னு திருக்காளத்தி அப்பர் பக்கத்து இருக்கும்
தன்நிகரில் கண்ணப்பர்தம் திருநாளில் அரனடியயைத்
துன்னுபொன்னுசாமி அடிகளின் இணையடியைத் தொழுது உய்வோம்!

– அம்பலவாண தேசிகர்

உமாபதி சிவனார் போற்றி!

அடியார்க்குஎளியன் எனத் தில்லை
அண்ணல் அருளும் திருமுகத்தின்
படியே பெற்றான் சாம்பானுக்குப்
பரமுத்தி அப்பொழுதே
உடலும் கரைவுற்று அடைந்திடுவான்
உயர்தீக் கையினை அருள்நோக்கால்
கடிதில் புரிகொற்றங்குடியார்
கமல மலரின் கழல் போற்றி!

ஊழிதோறும் ஊழி உயர் நொடித்தான் மலை!
திருக்கைலாயக் காட்சி



காவாய் கனகத் திரளே போற்றி!
கைலை மலையானே போற்றி! போற்றி!

போற்றியோம் நமச்சிவாய! புயங்கனே மயங்குகின்றேன்!
போற்றியோம் நமச்சிவாய! புகலிடம் பிறிதுஒன்று இல்லை!
போற்றியோம் நமச்சிவாய! புறம்எனைப்போக்கல் கண்டாய்!
போற்றியோம் நமச்சிவாய! சய சய போற்றி! போற்றி!

அடக்க விலை ரூ. 4.00

இந்நூல் கிடைக்குமிடம் :

இரா.கி. சச்சிதானந்தம்
அமைப்பாளர்
அருள்தரும் மாணிக்கவாசகர் மன்றம்,
இராமாபுரம் வழி, காவேரிப்பாக்கம், வேலூர் மாவட்டம் – 632 508.